# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சூடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு யாரையாவது வைது கொண்டிருக்க வேண்டும்! அப்பொழுதுதான் அவர்களுக்கு காலம் சிரமம் இல்லாமல் கழியும். இப்பொழுது 'ராமர் சீஸன்' நடந்து கொண்டிருக்கிறது. ராமரை ஏசாவிட்டால் அவர்களுக்கு மூச்சு நின்றுவிடும். ஆனால் ஏச்சுகளையாவது நாம் பொறுத்துக் கொள்ளலாம். ராமன் என்றே ஒருவன் ஒருநாளும் வாழவில்லை; அவன் முழுக்க முழுக்க ஒரு கற்பனைக் கதாபாத்திரம் என்று புதிதாக ஒரு வாதத்தை அள்ளி வீசி ராமனை முகவரியில்லாதவனாக ஆக்க முயலுகிறார்கள்.

இவர்கள் போட்ட கூச்சலில் எனக்கே சந்தேகம் வந்துவிட்டது ராமன் என்பவன் நிஜமா அல்லது வெறும் நிழலா என்று! என்னைத் தெளிவு படுத்திக் கொள்வதற்கே இந்திய வரலாறு ஏடுகளைப் புரட்டினேன் அப்பொழுது நான் சந்தித்த அநுபவங்கள் பல அவற்றை உங்களுடன் இதோ பகிர்ந்து கொள்ளுகிறேன் :

வெறும் கற்பனையான கதாபாத்திரம் என்பதற்கு உதாரணமாக பரமார்த்த குரு கதையின் பாத்திரங்கள் மற்றும் பஞ்ச தந்திரக் கதையின் பாத்திரங்கள் ஆகியவற்றைச் சொல்லலாம். அவற்றைத் துணிந்து கற்பனைப் பாத்திரங்கள் என்று கூறலாம். இந்தப் பாத்திரங்களுக்கு வரலாறு இல்லை, வாழ்ந்த தேதி, வளர்ந்ததேதி, பிறந்ததேதி, இறந்ததேதி இவை என்றுமே இல்லை. இவர்களின் வரிசையில் ராமரும் ஒருவர் என்கிறார்கள். கற்பனைக் கதாபாத்திரங்களுக்குக் கோயில் கட்டும் பழக்கம் நம் நாட்டில் உண்டா? பஞ்சதந்திரக் கதையில் வரும் நரி; காகம், பூனை, ஆந்தை இவற்றுக்கு கோவில்கள் உண்டா? குறைந்த பட்சம் முச்சந்திச் சிலைகளாவது உண்டா? ஆனால் இந்த ராமனுக்கு காஷ்மீர் தொடங்கி கன்யாகுமரி வரை கணக்கில்லாத கோவில்கள் இருக்கின்றன. ஜாதி, மொழி, அந்தஸ்து ஆகிய பேதங்களைக் கடந்து அனைத்து மாநிலங்களிலும், ராமனைக் கோவில் கட்டி வழிபட்டு வந்திருக்கிறார்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக!

ஒரு கற்பனைப் பாத்திரத்தைத் தெய்வமாக்கி வழிபடும் இந்திய சமுதாயத்திலே ஒரு அறிஞன் கூட இன்றுவரை இது தேவையற்ற வேலை என்று தடுக்க வில்லையே! ஆதனால்தான் பகுத்தறிவினும் விஞ்ஞானத்திலும் பெரியவர்களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் மேல் நாட்டினர் கூட ராமனுக்கு கோயில் எழுப்பி வழிபடுகிறார்கள். ராமனைக் கற்பனைப் பாத்திரமாக இவர்கள் ஏன் சொல்கிறார் கள்? மிக உயர்ந்த நற்குணங்களுக்கு உறைவிடமாக அவன் வாழ்ந்தான் என்பதனால் இருக்குமோ? இருக்கலாம். ஏனென்றால் ஊருக்கு ஒரு வைப்பாட்டி

விதம் வைத்துக் கொண்டு வாழ்பவர்களுக்கு ராமன் என்பவன் ஆயுள் முழுவதும் ஏகபத்தினி விரதனாக வாழ்ந்தான் என்பதையும், மனைவியைப் பிரிந்த காலத்தில் கூட பிற பெண்களை அவன் ஏறெடுத்துப் பார்த்ததில்லை என்பதனையும் நம்புவதற்குக் கடினமாக இருக்கலாம். புளுகிப்புளுகிப் பொது வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ராமன் தன்வாழ்வில் ஒருமுறை கூட பொய் சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொள்ள இயலாமல் இருக்கலாம். தினம் பாட்டில் கணக்கில் மது அருந்துபவர்களுக்கு அந்தப் பழக்கம் இல்லாதவர்களைப் பார்க்கும் போது இவர்களால் எப்படிக் குடிக்காமல் வாழ முடிகிறது? என்று வியப்பு தோன்றுகிறது அல்லவா, அது போல!

மந்திரங்கள் ஜபிப்பதில் நம்பிக்கை உள்ள தேசம் இந்த தேசம். அலெக்ஸாண்டர் இந்த நாட்டுக்குப் படையெடுத்து வந்த போது கூட அவனுடைய படை வீரர்களைப் பாம்பு கடித்தபோது, நம்நாட்டு சாஸ்த்ரிகள் மந்திரித்து அந்த விஷத்தை இறக்கியதாக வரலாறு கூறுகிறது. மந்திரங்களிலே மிகச்சிறந்த மந்திரம் எது என்று யுத்த மைதானத்திலே யுதிஷ்டிரன் பீஷ்மரைக் கேட்டபோது அவர் பகவானுடைய ஆயிரம் நாமங்கள் தான் என் வெற்றியின் ரகசியம் என்று ஒப்புக் கொண்டார். அந்த ஆயிரம் நாமங்களின் மகிமையை தராசின் ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் ராமநாமத்தை வைத்தால் ராம நாமமே கனக்கும் என்று சிவன் பார்வதிக்குச் சொன்னதாக சாத்திரங்கள் கூறுகின்றன. ஒரு கற்பனைக் கதா பாத்திரத்துக்கு இந்த மஹிமை இருக்குமா? பரமார்த்த குரு, பரமார்த்தகுரு என்று நான் ஆயிரம் தடைவ ஜபித்தால் என் கஷ்டங்கள் நீங்குமா?

தொடை நடுங்கியாக வாழ்ந்த இளைஞன் காந்தி, ராமநாமத்தை ஜபித்த பிறகுதான் தேசத்தலைவனாக வெள்ளையரின் சிம்ம சொப்பனமாக, மாற முடிந்தது என்று அவரே தன் வாழ்க்கை வரலாற்றில் எழுதி இருக்கினறார். காந்தி, புராண காலத்து மனிதர் அல்லவே! நாம் பார்க்க வாழ்ந்தவர் தானே! சாகும் போதுகூட தன் வாயில் ராமநாமம்தான் வழங்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அவர் ஆங்கிலம் அறியாதவரா? வெளி நாடுகள் போகாதவரா? விஞ்ஞானத்தைக் காணாதவரா? பகுத்தறிவு இல்லாதவரா? மூடநம்பிக்கைக் காரரா? ஒரு கற்பனைக் கதாபாத்திரத்தின் பெயரையா அவர் ஜபித்து பலன் கண்டார்?

கற்பனைப் பாத்திரங்களுக்கு, காவியங்கள் படைப்பது கற்றறிந்தோர்க்கு பழக்கமில்லை. ஆனால் ராமன் மேல் வால்மீகி மட்டுமல்ல, கம்பர், துளசிதாஸர் மற்றும் இப்படி எத்தனையோ அறிஞர்கள் பக்திகாவியங்கள் இயற்றி இருக்கிறார்கள். மொல்ல ராமாயணம், துளசி ராமாயணம், கம்ப ராமாயணம் என இந்தியாவில் 32 ராமாயணங்கள் இருக்கின்றன. ஒரு கற்பனைக் கதாபாத்திரத்துக்கு இத்தனை பக்தி சாஹித்தியங்கள் ஏன்? எந்தக் கற்பனை பாத்திரத்துக்காவது இப்படி இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளனவா?

ராமநவமி என்றும், கோகுலாஷ்டமி என்றும் உற்சவங்கள் உலகெங்கும் நடக்கின்றன. என்றுமே பிறக்காத, எங்குமே வாழாத, ஒரு கற்பனை நாயகனுக்கு விழா எடுத்துப் பணம் செலவு பண்ண டாக்டர்களுக்கும், வக்கீல்களுக்கும், பட்டதாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் பைத்தியமா என்ன! பலன்தராத பக்தி இப்படி வெற்றிகரமாக நிலைபெற முடியாது.

அவரவர் வாழ்விலே ஆயிரம் தொல்லைகளை ராமன் தீர்த்து வைத்ததால்தான் அவன் இப்படி கொண்டாடப்படுகிறான்.

பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் போது கூட நாம நட்சத்திரம் பார்த்து பெயர் வைப்பது தான் நம் நாட்டில் பழக்கம். பெயரில் கூட அதிர்ஷ்டம் இருப்பதாக நாம் நம்புகிறோம். அந்தக்க கணக்கில் பார்க்கும் போது இந்த நாட்டில் எத்தனை கோடி பேருக்கு ராமனுடைய பெயர் வைக்கப் பட்டிருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். வைணவத்தை வளர்த்த உடையவருக்குக் கூட இராமனுடைய தம்பி என்ற பொருளில்தானே ராமானுஜர் என்று பெயர் வைத்தார்கள். இன்றும் வட இந்தியாவில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது good morning பதிலாக ஜெய்ஸ்ரீராம் என்றுதான் சொல்லுகிறார்கள். இவர்கள் எல்லாம் அர்த்தமற்ற பழக்கத்தை அவசியம் இன்றி கைக்கொண்டிருக்கிறார்களா?

ணைவத்தில் நம்பிக்கை வைத்து நெற்றியில் திருமண்ணும், தினசரி வாழ்வில் வைணவ ஆச்சாரங்களையும் ஏற்றுக் கொண்டவர்களுக்கு ராமன் சொன்ன சரம ஸ்லோகத்தை தீட்சையின் போது உபதேசிக்கிறார்கள். அந்த நம்பிக்கைதான் அவர்களை வாழவைக்கிறது. ராமனை விலக்கிவிட்டால், வைணவம் இல்லை, வேதங்கள் இல்லை, சாத்திரங்கள் இல்லை!

ராமாயணம் இதிகாசமே தவிர வரலாறு அல்ல என்கிறார்கள். இதிகாசம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்று அவர்களுக்குத் தெரியுமா? இதி + ஹ = இதிஹாஸம். ''இவ்வாறாக நடந்தது'' என்பது அந்த சொல்லின் பொருள். இதிகாசம் என்ற சொல்லுக்கே நடந்த வரலாறு என்றுபொருள் இருக்கும்போது அது வரலாறு அல்ல என்பவர்கள் எவ்வளவு பெரிய மேதாவிகளாக இருப்பார்கள்! ராஜாஜியே ராமன் கற்பனைப் பாத்திரம் என்று எழுதியதாகச் சொல்கிறார்களே, அவர் அப்படி நினைத்திருந்தால் ராமன் கதையை 'சக்ரவர்த்தித்திருமகன்' என்ற தலைப்பில் எளிய நடையில் நூல்வடிவில் படைத்திருப்பாரா? அவர் என்ன எழுதினார், இவர்கள் எப்படி புரிந்துகொண்டார்கள்!? வைணவப் பாரம்பரியப்பெயரான 'சக்ரவர்த்தி'' சேர்த்துக்கொள்ளும் ராஜாஜி இப்படி எழுதி இருப்பாரா? அரசியல் புரட்டலை ஆன்மிகத்தில் காட்டலாமா?

தமிழகத் தலைவர்கள் ராம நிந்தை செய்தபோது வடமாநிலங்கள்தான் கொதித்தெழுந்தன. தமிழகத்தில் அவ்வளவு எதிர்ப்பில்லை. ஏனென்றால் ராமனுக்குச் செருப்புமாலை அணிவித்து மகிழ்ந்த மாநிலம் அல்லவா தமிழகம் ! ராமனின் பெயர் கொண்ட நாத்திகத்தலைவருக்கு நாற்சந்திகளில் சிலைவைத்து பெருமைப் பட்ட மாநிலம் அல்லவா தமிழகம்? 'கடவுள் இல்லை' என்றும், ''கடவுளை கற்பித்தவன் முட்டாள்''என்றும் சுவர்களில் எழுதிப் பிரகடனப்படுத்திய இந்த தமிழ்நாடு இப்படி இருப்பதில் வியப்பில்லை. ''கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி'' என்று கூறி, ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் ரிஷிகளையும் சித்தர்களையும் மஹான்களையும் ''காட்டுமிராண்டிகள்'' என்று அழைத்த தமிழகத்துக்கு ராமனை நிந்தை செய்தால் கோபம் எப்படி வரும்?! தமிழகமே ! நீ எந்த திசையை நோக்கில் போய்கொண்டிருக்கிறாய்? தன்னையே அழித்துக்கொள்ளும் தமிழ்ச் சமுதாயமே ! உனக்கு யார் அறிவு கூறி திருத்தப் போகிறார்?